**குருநாகல் மாநகர சபை**
**குருநாகல் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மே 11 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 26 ஆந் திகதி சபையிக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு குருநாகல் மாநகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான 08 வாகனங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளுராட்சி மன்ற ஓய்வூதிய நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 50,229,595 தொகை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) முன்னைய ஆண்டிற்குரிய கணக்காய்வுக் கட்டணங்கள் குறை ஒதுக்கீடு ரூபா 65,800 இற்குரிய சீராக்கங்கள் மீளாய்வாண்டின் கணக்குகுளில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா. 82,695,481 ஆன பட்டியலாக்கப்பட்ட நீர் வருமானம் நிதிக்கூற்றுக்களில் ரூபா. 79,215,994 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(உ) முன்னைய வருடத்திற்கான கடன் கொடுத்தோர்களின் மிகை ஒதுக்கம் பதிவழித்தல் தொகை ரூபா. 440,999 இனால் குறைவாகக் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிலும் சீர் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) கடந்த வருடத்தில் 02 திணைக்களங்களுக்கான 06 நிர்மாணங்களின் ரூபா. 5,786,078 ஆன கடன் கடன்கொடுத்தோரின் ஒதுக்கம் மீளாய்வாண்டில் செலுத்துதல் அல்லது பதிவழித்தல் என்பன மேற்கொள்ளப்படாவிடினும், ஆண்டின் இறுதியிலான கடன் கடன்கொடுத்தோர் மீதிகளில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டில் உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்படாத 05 நிர்மாணங்களுக்காக நிதிக்கூற்றுக்களில் ரூபா. 5,297,022 கடன் கடன்கொடுத்தோர் ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டிற்கான செலுத்த வேண்டிய ரூபா. 5,167,484 நீர் மற்றும் மின் கட்டணங்களிற்கான நிதிஏற்பாடு நிதிக்கூற்றுக்களில் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) மீளாய்வாண்டு இறுதிக்கு முன்னரான ரூபா. 77,549 ஆன வேறு வருமானங்கள் நிதிக் கூற்றுக்களில் ரூபா 341,033 என குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஒ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் கைவிடப்பட்டிருந்த ரூபா. 260,004 ஆன தொகையில் முற்பணமாக கிடைத்த தொகை மீளாய்வாண்டில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஓ) 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா. 1,087,428 பெறுமதியான நிலையான சொத்துக்கள் மீளாய்வாண்டுடன் தொடர்பாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஔ) மீளாய்வாண்டில் ரூபா. 11,458,360 ஆன பெறுமதி சேர் வரி, செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஃ) 2017 டிசெம்பர் 31 திகதி செலுத்தப்பட வேண்டிய ரூபா. 4,929,856 ஆன பெறுமதி சேர் வரி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(க்) 50352 ஆம் இலக்க வரவு விடயத்துடன் தொடர்பான தண்டப் பணத்திற்காக வருடத்தில் பட்டியலிடப்பட்ட ரூபா. 76,187 ஆன வருமானமானது செலவுக் கணக்கில் ரூபா. 212,920 என பாதகமான பெறுமதியாக குறிப்பிடப்பட்டிருந்தது.

(க) இரண்டு வங்கிகளின் நிலையான வைப்புக்களின் மீது ரூபா. 1,339,829 ஆன வட்டி ஆண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 19 கணக்கு விடயங்களின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய அட்டவணைகளின் மீதிகளுக்கிடையே ரூபா 40,690,030 ஆன இணக்கமின்மைகள் காணப்பட்டன.

(ஆ) நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பொழிப்பு வருமான பகுப்பாய்வு மற்றும் பொருள் கூட்டு பதிவேட்டிற்கு இடையே ரூபா 1,410,574 ஆன இணக்கமின்மைகள் காணப்பட்டன.

(இ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 81,672,021 ஆன கடன் மீதிகளுக்குரிய ஆண்டில் கடன்கொடுத்தோர் கொடுப்பனவு மற்றும் மற்றும் பதிவழித்தல் மொத்தம் ரூபா 84,984,660 ஆக இருந்தமையால் ரூபா 3,312,639 ஆன வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 211,450,043 ஆன பெறவேண்டிய கணக்கு மீதிகளில் 01 ஆண்டினை விஞ்சியிருந்த ரூபா 37,253,163 ஆன மீதிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 150,205,485 தொகையான செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் 01 ஆண்டினை விஞ்சியிருந்த ரூபா 46,924,564 ஆன மீதிகள் தீர்வுசெய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 370,192,935 ஆன 26 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | | |
| XXIV ஆம் அத்தியாயத்தின் 3.7 ஆம் பந்தி | 1,200,000 | 12 உத்தியோகத்தர்களுக்குரிய மீளாய்வாண்டில் வழங்கப்பட்டிருந்த இடர் கடன்களின் தவணை மற்றும் வட்டி அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | |
| (i) நி.பி 135 | - | ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்கள் உத்தியோகத்தர்களின் பரிசீலனைக்கு உட்படும் வகையில் கடமை பகிரப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நி.பி 177(1) | 107,231 | வெளிக்களத்தில் சேகரிக்கப்பட்ட பணத்தை நாளாந்தம் அல்லது தாமதமின்றி நிதிப் பொறுப்பாளருக்கு அனுப்பிவைப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நி.பி 189 | 750,305 | 01 ஆண்டிற்கும் 10 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலம் தீர்வு செய்யப்படாமல் இருந்த 18 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) நி.பி384(3) | - | சபைக்கு கிடைக்கும் காசோலைகள் தொடர்பாக விபரமாக பதிவு செய்வதற்கு பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (v) | நிதிப்பிரமாணம் 396(ஈ) | 59,874 | வழங்கப்பட்டும் கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படாத 25 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (vi) | நிதிப்பிரமாணம் 571(2) | 9,288,051 | வைப்புச் செய்து 02 ஆண்டுகள் காலம் கடந்த 22 வைப்புக்கள் தொடர்பாக செயற்படுத்தியிருக்க வில்லை. |

(இ) 2006 பெறுகை வழிகாட்டல் கோவை

6.2.2 வழிகாட்டல்

| | | | |
|---|---|---|---|
| | | 765,868 | போட்டி கேள்வி கோரல் குறைந்த காலப்பகுதியில் நிறைவேற்றப்பட்டி ருக்கவில்லை. |
| (ஈ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | 72,570 | வாகனங்களில் உள்ளக திருத்த வேலைகளின் போது வாகனங்களின் பகுதிக்கு கழற்றாமல் மதிப்பீடு பெற்றுக்கொண்ட காரணத்தினால் மேலதிக செலவினமொன்றை மேற்கொள்ள நேர்நதது. |
| (உ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | - | கணனிகள், உப பாகங்கள் மற்றும் மென் பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 212,024,949 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 136,766,383 ஆக காணப்பட்டது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 03 வங்கிக் கணக்குகளின் மாதாந்த இணக்கக்கூற்றின் பிரகாரம் 13 சந்தர்ப்பங்களின் போது ரூபா 96,411 ஆன இனங்காணப்படாத கொடுப்பனவுகள் காணப்பட்டது.

(ஆ) 02 வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டிருந்த போதும் தீர்வையாகாத ரூபா 34,509 தொகை 07 மாதங்கள் முதல் 06 ஆண்டு காலமாக தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் 03 வங்கிக் கணக்குகளுக்குரிய 03 ரூபா 5,290,450 தொகையான 41 நேரடி வைப்புக்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
| | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| (i) | வீதவரி மற்றும் வரி | 160,900 | 167,197 | 162,305 | 85,347 | 146,100 | 154,229 | 159,745 | 80,455 |
| (ii) | வாடகை | 80,630 | 71,123 | 67,977 | 16,139 | 96,513 | 76,284 | 68,580 | 12,994 |
| (iii) | அனுமதிப் பத்திர கட்டணங்கள் | 14,705 | 15,914 | 15,914 | - | 10,705 | 10,520 | 10,520 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 413,147 | 336,470 | 268,771 | 99,540 | 402,163 | 295,100 | 292,174 | 31,842 |
| | மொத்தம் | 669,382 | 590,704 | 514,967 | 201,026 | 655,481 | 536,133 | 531,019 | 125,291 |

**குறிப்பு**

2016 மற்றும் 2017 ஆண்டுகளில் சேகரிக்கப்பட்ட வருமானங்களில் முன்னைய ஆண்டுகளுக்குரிய நிலுவை வருமானங்களும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

### 2.3.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

மீளாய்வாண்டிற்காக பட்டியலிடல் ரூபா 590 மில்லியனிலிருந்தும் நிலுவை வருமானமான ரூபா 125 மில்லினில் இருந்தும் ரூபா 515 மில்லியன் அறவிடப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 125 மில்லியனான நிலுவை வருமானம் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 201 மில்லியன் வரை அதிகரித்திருந்தது.

### 2.3.3 வீதவரி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 12 வீதவரி வட்டாரங்களின் கீழ் 14,416 அலகுகளுக்குரிய பட்டியலிடப்படட வருமானம் ரூபா 77,512,545 ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா

44,155,880 ஆன நிலுவையில் ரூபா 33,094,423 தொகை 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் மீதிகளாகும்

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 37,964,657 ஆன நிலுவை வருமானத்தில் ரூபா 100,000 இற்கு மேற்பட்ட நிலுவையொனறு காணப்படும் 19 நீர் பாவனையாளர்களிடமிருந்தான மீதி ரூபா 4,544,660 ஆக இருந்தது.

**2.3.4 வாடகை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) லொத்தர் கூட வாடகை மற்றம் சுற்றுலா வாடகை அறவீடு மந்த கெதியில் இருந்த காரணத்தினால் மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 4,892,646 நிலுவையாகக் காணப்பட்டன.

(ஆ) குருணாகல் புதிய கடை தொகுதியில் 57 கடைகளுக்குரிய ரூபா 706,500 ஆன கடை வாடகை மற்றும் ரூபா 360,845 ஆன சேவைக் கட்டணங்கள் நிலுவையாகக் காணப்பட்டன.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் குருணாகல் பஸ் பேருந்து நிலையத்தில் 62 கடைகளிலிருந்து நிலுவை வாடகை ரூபா 1,160,581 மற்றும் முற்கொடுப்பனவு தொகை ரூபா 355,880 அறவிட வேண்டியிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் ரஜபிஹில்ல மற்றும் ரன்தலிய ஆகிய இரண்டு வாடி வீடுகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 6,105,427 ஆன வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் இறுதியில் சுரங்க கடை தொகுதி மற்றும் பொது வியாபாரச் சந்தை மற்றும் ஏனைய கடை வாடகைகளாக முறையே ரூபா 70,000 மற்றும் ரூபா 1,614,650 அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.3.5 ஏனைய வருமானம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சுற்றுலா வாடகை மற்றும் லொத்தர் கூட வாடகை தாமதக் கட்டணம் ரூபா 489,265 அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் கொல்லுமிடக் கட்டணங்கள் ரூபா 185,750 அறவிவேண்டியதாக காணப்பட்டது.

**2.3.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் ஆன நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள் முறையே ரூபா 2,915,202 மற்றும் ரூபா 77,729,187 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

**03. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகநலன், வசதி

மற்றும் நலன்புரி போன்ற சபையால் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

**(அ) உப விதிகள்**

மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 272 ஆம் பிரிவின் கீழ் 32 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 541/17 ஆம் இலக்க மற்றும் 1989 சனவரி 20 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி பத்திரத்தின் மூலம் விதிக்கப்பட்டிருந்த 53 உப உறுப்புரைகள் மற்றும் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 1933/40 ஆம் இலக்க மற்றும் 2015 செப்தம்பர் 25 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி மூலம் விதிக்கப்பட்டிருந்த 01 உப விதி மாநாகர சபையினால் பின்பற்றப்பட்டிருந்ததுடன் சபையினால் 07 உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன.

**(ஆ) கைவிடப்பட்ட செயற்பாடுகள்**

2017 ஆம் ஆண்டிற்குரிய பாதீடு செய்யப்பட்டிருந்த ரூபா 68,450,000 ஆன 66 நிர்மாணங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**(இ) திண்மக்கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நாளாந்த கழிவு முகாமைத்துவ நிலையத்திற்கு 44,500 கிலோ கிராம் அளவிலான கழிவுகள் சேகரிக்கப்படுவதுடன், மீளாய்வாண்டில் 436,080 கிலோ கிராம் கழிவு பயன்படுத்தப்பட்டு 27,255 கிலோ கிராம் உரம் தயாரிக்கப்பட்டிருந்தது.

(ii) சுந்தராபொலயில் அமைந்துள்ள கழிவு நிலையத்தில் உக்கலடையும் மற்றும் உக்கலடையாத என வகைப்படுத்தப்படாத பெரிய கழிவு மலை ஒன்று காணப்பட்டதுடன், அது சுற்றாடல் சிக்கல் ஒன்றுக்கு காரணமாக இருந்தது.

(iii) திண்மக் கழிவு முகாமைத்துவ நடவடிக்கைகளில் ஈடுபடும் ஊழியர்களுக்கு சுத்திகரிக்கும் பொருட்கள் மற்றும் ஆரோக்கிய உபகரணங்கள் மீளாய்வாண்டில் வழங்கப்பட்டிருக்கவில்லை என 2018 ஜுலை 19 ஆம் திகதி பௌதீகப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

**(ஈ) சுற்றாடல் சிக்கல்கள்**

நகர அதிகார பிரதேசத்தில் வாய்க்கால்உட்பட எஜனய வடிகாண்களில் குப்கைள் மற்றும் பிளாஸ்ரிக் போத்தல் காரணமாக அசுத்தமாகியிருந்ததுடன் அத தொடர்பாக சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ திறமையின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிக் கூற்றுக்களில் பல வருடங்களாக நிலவும் ரூபா. 749,389 ஆன சம்பள முற்பணம் மற்றும் ரூபா. 1,245,414 ஆன உணவுப் படி என்பவற்றை தீர்வு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வாகனத் தரிப்பிடக் கட்டணங்கள் அறவிடுவதற்கான பற்றுச்சீட்டுககளின் பிரதி இல்லாதவிடத்து, அந்த பற்றுச்சீட்டுக்களில் தொடர்புடைய தகவல்கள் குறிப்பிடப்படாமையால் அறவிடப்படும் கட்டணங்கள் வாகன வகைகளின் பிரகாரம் சரியானதா என்பது உறுதிப்டுத்தப்படவில்லை.

(இ) அரசின் உத்தியோபூர்வ வீடுகளுக்காக சிக்கன வாடகை அறவிடுவதாயின் 2004 ஜுலை 15 ஆம் திகதிய எப்ஸீ/2/2005 ஆம் இலக்க நிதி ஆணைக்குழுவின் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கமைய விலை மதிப்பீட்டு திணைக்களத்தினால் புதிய மதிப்பீடொன்றை பெற்று அதற்கமைய சிக்கன வாடகை அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் சபைக்குரிய சகல அரச வீடுகளிடமிருந்தும் 2000 பெப்ரவரி 21 திகதிய மதீப்பீட்டின் படி வாடகை அறவிடப்பட்டிருந்தது.

## 3.3 மனித வள முகாமைத்துவம்

### (அ) ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகை

(i) மீளாய்வாண்டின் இறுதியில் மாநகர சபையின் சிரேஷ்ட, மூன்றாம் மட்ட, இரண்டாம் மட்ட மற்றும் ஆரம்ப நிலை பதவிகளில் முறையே 04, 02, 35 மற்றும் 71 வெற்றிடங்கள் நிலவியதோடு 02 ஆரம்ப நிலை பதவிகளில் 10 மிகைகள் நிலவின. மேலும் பாலர் பாடசாலை ஆசியர்களாக 05 பேர் மற்றும் 03 ஆரம்ப பதவிகளில் 17 பேரும் ஒப்பந்தத்தின் அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், 05 ஆரம்ப நிலை பதவிகளிற்காக 35 மேலதிக ஊழியர்கள் சேவையில் இணைக்கப்பட்டிருந்தனர்

(ii) கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையத்தின் நடவடிக்கைகளுக்கு நாளொன்றுக்கு குறைந்தது 34 ஊழியர்கள் தேவைப்பட்ட போதிலும், 14 ஊழியர்கள் மாத்திரம் சேவையில் பணி புரிவதாக 2018 ஜுலை 19 ஆம் திகதி நடைபெற்ற வெளிக்கள ஆய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது.

### (ஆ) ஊழியர் கடன்

இடமாற்றம் பெற்றுச் சென்ற, ஓய்வுபெற்ற மற்றும் மரணித்த 30 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 1,518,729 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

## 3.4 செயற்பாட்டு திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நீர்மானி பொருத்துவதற்கான வேண்டுகோளை நிறைவேற்றுவதில் வருடக் கணக்கான தாமதம் காணப்பட்டது.

(ஆ) ரஜபிஹில்ல வாடி வீடு குத்தகைக்கு விடுவதற்கான குறைந்த தகைமைகள் உறுதி செய்யப்படாமல் 2015 ஒக்தோபர் 15 ஆந் திகதி முதல் 10 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்ததுடன், 2016 நவெம்பர் 10 ஆம் திகதி வரையிலும் வியாபார நடவடிக்கைகள் ஆரம்பிக்காமை மற்றும் குத்தகை வாடகை (வரி மற்றும் தண்டப்பணம் உள்ளடங்கியதாக) ரூபா. 8,474,084 ஆன தொகை செலுத்தப்படாமையின் அடிப்படையில் உடன்படிக்கைகள் இரத்துச் செய்யப்பட்டிருந்தன. அத்தோடு இது குறித்து நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்ததால் தொடர்புடைய ஆதனத்தை கையேற்க முடியாமலிருந்தது.

(இ) மாநகர சபைக்குரிய பிரதேசத்தில் ஏற்கனவே இருந்த கடைகள் மற்றும் 07 அலுவலக தொகுதிகளில் இருந்து 2015 செப்தெம்பர் 25 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் 11.(VI) உப பிரிவின் பிரகாரம் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 சொத்துக்கள் பதிவேடுகளுக்கு உட்படுத்தப்படாமை

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 541/17 ஆம் இலக்க மற்றும் 1989 சனவரி 20 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி பத்திரத்தின் III.15(2) இன் பிரகாரம் ஒவ்வொரு பிரதானிகளாலும் தமது திணைக்களத்தின் உள்ளே தமது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றம் அலுவலகங்கள் மற்றும் கட்டிடங்களில் உள்ள பொருட்கள் தொடர்பாக போதியளவு விபரங்கள் காண்பிக்கப்பட வேண்டிய வகையில் பதிவேடுகள் பேணப்பட வேண்டிய போதிலும் சபையினால் பேணப்பட்டிருந்த அப்பதிவேடுகளில் பெறுமதி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

### 3.5.2 கையேற்கப்படாத சொத்துக்கள்

பிரதான செயலகத்திலிருந்து 2013 யூலை 03 ஆந் திகதி சபைக்கு கிடைத்த மோட்டார் கார் வண்டியை சபைக்கு கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5.3 விளைவற்ற / குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

சபைக்குச் சொந்தமான 10 வாகனங்கள் உருக்குலைந்ததால் விளைவற்றுக் காணப்பட்டதுடன், 09 உத்தியோகபூர்வ விடுதிகள் பயன்படுத்தாமல் காணப்பட்டன.

### 3.5.4 வருடாந்த பொருள் மெய்மையாய்வு

2017 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2018 யூன் 18 ஆந் திகதி வரை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கிவல்லை.

## 3.6 பெறுகை

### 3.6.1 பெறுகை திட்டம்

பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1 பிரிவின் பிரகாரம் சபையினால் மீளாய்வாண்டிற்காக பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6.2 வழங்கல் மற்றும் சேவைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.6.1 (அ) மற்றும் (இ) இன் பிரகாரம் விவரக்குறிப்புக்கள் சமர்ப்பிக்கப்படாமல் நீர்க்குழாய் மற்றும் உப பாகங்களுகக்காக பயன்படுத்தப்படும் எஸ்லோன் வகையான 07 உற்பத்திகளுக்குரிய 1,075 அலகுகள் ரூபா 985,750 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.6.1 இல் குறிப்பிடப்பட்ட சந்தர்ப்பங்களுக்கு பொருத்தமாக மீண்டும் கட்டளையிடுவதற்காக அதிகார் இல்லாமல் ரூபா 325,000 பெறுமதியான 100 ½" நீர்மானிகள் மீண்டும் கட்டளையிட்டு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன.

(இ) களஞ்சிய பின்காட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது 292 நீர்மானிகள் வழங்கப்பட்டு ரூபா 247 பொருத்தப்பட்டமயால் 45 நீர்மானிகள் பற்றாக்குறையாக காணப்பட்டன.

(ஈ) 1000 லீற்றர் மற்றும் 500 லீற்றர் முறையே 02 நீர்த்தாங்கிகள் மற்றும் 11 நீர்த் தாங்கிகள் ரூபா 75,929 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 10 ஆண்டு உத்தரவாத காலத்துடனான ஆகக்குறைந்த விலை நிராகரிக்கப்பட்டமைக்கு காரணங்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

### 3.6.3 ஒப்பந்த நிர்வாகம்

பொது மயானத்தில் பழைய சுடலை கூடத்தை புனரமைப்பதற்காக நிர்மாண பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள C 9 வகை ஒப்பந்தக்காரரொருவரால் மேற்கொள்ள வேண்டிய போதிலும் வகை குறிப்பிடப்படாத ஒப்பந்தக்காரருக்கு கேள்வி வழங்குவதற்கு தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவிற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

## 04. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காக 2018 மே 11 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் 05 வருமான விடயங்கள் மற்றும் 05 செலவின விடயங்கள் என்பவற்றின் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான எண்ணிக்கைக்கு இடையே 12 சதவீதத்திலிருந்து 89 சதவீதம் வரையான விலகலொன்று காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் போது பாதீடு செய்யப்படாதிருந்த 02 வழிகளில் ரூபா 4,600,000 ஆல் திருத்தம் செய்யப்பட்டிருந்தன.

### 4.3 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 541/17 ஆம் இலக்க மற்றும் 1989 சனவரி 20 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி பத்திரத்தின் III ஆம் பகுதியின் 13 ஆம் பிரிவின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 05. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு தொடர்பான குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதுடன் பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக மேலும் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) நிலையான சொத்துக்களின் சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படாமை<br>(ii) முற்பண பெறுமதிகள் தவறாக காண்பிக்கப்படல்<br>(iii) நடைமுறைச் சொத்துக்கள் / பொறுப்பு முறைப்படி கணக்கீடு செய்யப்படாமை<br>(iv) நடைமுறையல்லாத பொறுப்புக்கள் கணக்கீடு செய்யப்படாமை |

| | | | |
|---|---|---|---|
| | | (v) | வைப்பு மீதிகள் தவறாக கணக்கீடு செய்யப்பட்டமை |
| | | (vi) | வருமானம் குறைத்த கணக்கீடு செய்யப்பட்டமை. |
| (ஆ) | வருமான நிர்வாகம் | | பெறவேண்டிய நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (இ) | நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | (i) | சொத்துக்களை ஆவணங்களில் உட்படுத்தாமை |
| | | (ii) | சொத்துக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தாமை |
| | | (iii) | சொத்துக்களை கையேற்க நடவடிக்கை எடுக்கப்படாமை |
| | | (iv) | விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாட்டுடைய சொத்துக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படாமை |
| | | (v) | வருடாந்த பொருள் மெய்மையாய்வு / இருப்பு கணிப்பீடு செய்யாமை. |
| (ஈ) | பெறுகை | (i) | பெறுகை வழிகாட்டல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்காமை. |
| | | (ii) | பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்படாமை. |
| (உ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) | மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானங்களுக்கு இடையே போதியளவு வேறுபாடுகள் காணப்பட்டமை. |
| | | (ii) | பாதீடு செய்யப்பட்ட நிர்மாண வேலைகள் மேற்கொள்ளாமை |
| (ஊ) | ஊழியர் முகாமைத்துவம் | (i) | வெற்றிடங்களை பூர்த்தி செய்யாமை |
| | | (ii) | நிலுவையாக இருந்த ஊழியர் கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| (எ) | கடன்பட்டோர்/ கடன் கொடுத்தோர் கட்டுப்பாடு | (i) | அட்டவணைகள் தயாரிக்கப்படாமை |
| | | (ii) | காலப்பகுப்பாய்வு தயாரிக்கப்படாமை |